**29.12.2023 ஆம் தேதிய சாதாரணக் கூட்டப் பொருட்கள்**

**பொருள் எண்.1**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் : 2023-24-ன் கீழ், இந்நகராட்சி சிங்கன்காவு பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இணைய தளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 31.10.2023 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | 0.53 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | திரு.எ.விஷ்ணு ராம் ஒப்பந்ததாரர் | 0.21 % மதிப்பீட்டை விட குறைவு |

**அ.கு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.377-1/2023/இ1

**தீர்மானம் எண்.677 அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள TN 75 K 6526 ஈப்பு வாகனத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.50000/- மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.661 நாள் 31.10.2023-ல் மன்றம் ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பேரில் கீழ்காணும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 27.09.2023 -ம் தேதி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | பணியின் விபரம் | M/s.Akshaya Motors | M/s.Mathava motors | M/s.Ganesh Motors works |
|---|---|---|---|---|
| 1. | Repair and Rectification of full tinkering work including material and all cost etc complete | 26650 | 29500 | 31000 |
| 2. | Repair and Rectification of painting work including material and all cost etc complete | 15750 | 17000 | 18000 |
| 3. | Repair and Rectification of Gear lever changing work including material and all cost etc complete | 800 | 1500 | 1850 |
| 4. | Repair and Rectification of front suspensor work including material and all cost etc complete | 2800 | 3800 | 4400 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | Repair and Rectification of wheeler alignment work including material and all cost etc complete | 480 | 500 | 500 |
| **Total** | | **46480** | **52300** | **55750** |

**அ.கு :**

மேற்காணும் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.Akshaya Motors நிறுவனத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7051-1/2023/இ1

**தீர்மானம் எண்**.678 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது**.

**பொருள் எண்**.3

குளச்சல் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் TN 74 V 3530 வாகனமானது 2005 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு, 18 ஆண்டுகள் முடிவுற உள்ளதால் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. எனவே கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. Major Tinker works
2. Full painting
3. 4 Wheel Greese packup
4. Oil change
5. Oil fiter, Diesel filter, Air filter change
6. Whell alignment, Balancing

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்**.679 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது**.

**பொருள் எண்**.4

15-வது நிதிக்குழு மானியம் : 2023-24 திட்டத்தின் கீழ், குளச்சல் நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ் காலனி பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து இயங்கி வரும் pumping line மற்றும் Delivery line வால்வுகள் மாற்றியமைக்கப்பட வேண்டி உள்ளது. மேற்படி பணிக்கு ரூ.160000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், திட்டப்பணியினை விரைவில் தொடங்க வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.295/2023/இ1

**தீர்மானம் எண்**.680 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது**.

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சி அம்மா உணவகம் கட்டிடத்தின் மேற்கூரையானது தற்பொழுது மழை மற்றும் காற்று அதிகமாக வீசுவதினாலும் கடற்கரை பகுதிக்கு அருகில் இருப்பதாலும் Sheet roof பழுது பட்டு துருபிடித்து False ceiling உடைந்துவிட்டது. இது அரசின் திட்டப்பணியாக இருப்பதால் உடன் பழுது பணிகள் மேற்கொள்ள ரூ.3,75,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1202/2014/இ1

**தீர்மானம் எண்**.681 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் திட்ட பணிகள், குடிநீர் பணிகள், தெருவிளக்கு பணிகள் மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால், திட்டப்பணிகளை கண்காணிக்கவும் மேலும் முன்னேற்ற அறிக்கையினை அனுப்புவதில் கால தாமதம் ஏற்படாமல் இருக்கவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப1) துறை அரசாணை (நிலை) எண்.10 நாள் 23.01.2023-ன் படி, தொழில் நுட்ப உதவியாளர் பணியிடம் தேவைப்படுகிறது. எனவே முதல் நிலை நகராட்சி பொறியியல் பிரிவில் பணி ஆய்வாளர் பணியிடம் நிரப்பப்படும் வரையில் நகராட்சி பணிகளை தொய்வின்றி கவனிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் 2 எண்ணம் தொழில் நுட்ப உதவியாளர்களை ஓராண்டிற்கு பணிக்கு அமர்த்துவதற்கு ரூ.7,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கும் மேற்படி செலவு தொகையினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1121/2023/இ1

**தீர்மானம் எண்**.682 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.7**

குளச்சல் நகராட்சி அம்மா உணவகம் கட்டிடத்தின் மேற்கூரையானது தற்பொழுது மழை மற்றும் காற்று அதிகமாக வீசுவதினாலும் கடற்கரை பகுதிக்கு அருகில் இருப்பதாலும் Sheet roof பழுது பட்டு துருபிடித்து False ceiling உடைந்துவிட்டது. இது அரசின் திட்டப்பணியாக இருப்பதால் உடன் பழுது பணிகள் மேற்கொள்ள ரூ.3,75,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 28.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணியினை மேற்கொள்ள பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு.A.விஷ்ணு ராம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டுத் தொகையினை விட 0.18 % அதிகம் |
| 2. | M/s.Vargheesh Construction, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டுத் தொகையினை விட 0.02 % குறைவு |

**அ.கு** : குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vargheesh Construction, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1202/2014/இ1

**தீர்மானம் எண்**.683 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.8**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் : 2023-24-ன் கீழ், புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் பணியினை ரூ.157.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு, பணி மேற்கொள்ளும் இடத்தில் Pile load test செய்வதற்கான தொகை ரூ.47200/- அனுப்ப கேட்டு, அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி Invoice No.101 நாள் 22.11.2023 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.377/2023/இ1

**தீர்மானம் எண்**.684 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி வரி வசூல் மையத்தின் பயன்பாட்டிற்காக புதிய TVS 250 star DM Printer கொள்முதல் செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்.652 நாள் 31.10.2023-ல் ஒப்புதல் வழங்கியுள்ளதின்படி, 12.12.2023 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.Jesith Technologies | 16000/- | மதிப்பீட்டை விட 3.14 % அதிகம் |
| 2. | M/s.Saha Computers | | மதிப்பீட்டு விகிதம் |
| 3. | M/s.Pradeep computers | | மதிப்பீட்டை விட 1.02 % அதிகம் |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகைக்கு பெறப்பட்ட M/s.Saha Computers விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1062/2023/இ1

**தீர்மானம் எண்**.685 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் திட்ட பணிகள், குடிநீர் பணிகள், தெருவிளக்கு பணிகள் மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால், திட்டப்பணிகளை கண்காணிக்கவும் மேலும் முன்னேற்ற அறிக்கையினை அனுப்புவதில் கால தாமதம் ஏற்படாமல் இருக்கவும், நகராட்சி பொறியியல் பிரிவில் பணி ஆய்வாளர் பணியிடம் நிரப்பப்படும் வரையில் நகராட்சி பணிகளை தொய்வின்றி கவனிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் 2 எண்ணம் தொழில் நுட்ப உதவியாளர்களை ஓராண்டிற்கு பணிக்கு அமர்த்துவதற்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 13.12.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் | 700000/- | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.A.விஷ்ணு ராம் | | மதிப்பீட்டை விட 0.09% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் பெறப்பட்ட திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1121/2023/இ1
**தீர்மானம் எண்**.686 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ் காலனி பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணி நடைபெற உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து இயங்கி வரும் pumping line மற்றும் Delivery line வால்வுகள் மாற்றியமைக்க இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு 13.12.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீடு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் | 160000/- | மதிப்பீட்டை விட 0.15% அதிகம் |
| 2 | திரு.C.சுரேஷ் | | மதிப்பீட்டை விட 0.09% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் பெறப்பட்ட திரு. C.சுரேஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.295/2023/இ1

**தீர்மானம் எண்.**687 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மின்தடை / இயற்கை இடர்பாடு காலங்களிலும் தடையின்றி சீராக குடிநீர் வினியோகம் செய்வதற்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள 30 KVA, 50 KVA, 62.5 KVA, 200 KVA மற்றும் 250 KVA Generator களை பராமரிப்பு பணி ஒரு வருடத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.2,70,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/1268-1/2023

**தீர்மானம் எண்.**688 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் நலன் மற்றும் அவசர அவசியம் கருதி குடிநீர் மற்றும் தெருவிளக்கு சம்மந்தமான பணிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

| S.No | Place | Bill No | நிறுவனத்தின் பெயர் | செலவின விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | பாலத்தன்கரை (ம) சீம்பிளிவிளை (OHT) | 215 | Wins communication | New EB service application on line charge | 900/- |
| 2 | K.S.S.S காலனி Common Kitchen | TIKI721A1S1272 | TNEB, Colachel | Registration fees for EB post moving | 236/- |
| 3 | Daily Market | TIKI72PS1S579 | TNEB, Colachel | Registration Fees for EB pole shifting | 242/- |
| 4 | Colachel limit | 568 | Wins communication | New EB service and Addition load application on line charge (15th CFC 2022-23 ) (LED light) | 2750/- |
| 5 | Colachel limit | 517 | Wins communication | EB online fees for payment of Registration fees - LED light | 1300/- |
| 6 | Palathankarai (Sump) | 570 | Wins communication | New EB service application on line charge | 250/- |
| **Total** | | | | | **5678/-** |

எனவே மேற்படி தொகையை இந்நகராட்சி மின்பணியாளர் நிலை I (திருமதி.இரா.முத்தமிழ் மல்லிகை)-க்கு வரிசை எண்.1,6 -ல் உள்ள தொகை ரூ.1150 /- (900 + 250) ஐ குடிநீர் நிதியிலிருந்தும் வரிசை எண்.2,3,4,5-ல் உள்ள தொகை ரூ.4528/- (236 + 242 + 2750 + 1300)-ஐ வருவாய் நிதியிலிருந்தும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.884-1/2023/இ2

**தீர்மானம் எண்**.689 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.14**

குளச்சல் நகராட்சி கே.எஸ்.எஸ்.எஸ் காலனி பகுதியில் உள்ள சர்வே எண்.C2-4-8B காலி இடத்தில் 15-வது நிதிக்குழு மானியம் (Health Grant) 2023-2024-ன் கீழ் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதியின் படியும், நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதியின் படியும் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை ஒரு ஆங்கிலம் மற்றும் ஒரு தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.19,635/- தொகையினை Sudha Ads, Mylapore Chennai நிறவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** விளம்பர கட்டணம் ரூ.19,635/- தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.684/2023/இ1

**தீர்மானம் எண்**.690 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் முன்பகுதியில் உள்ள Bore No.17 லிருந்து லைன் போட்டு Market pumping line உடன் link செய்வதற்கம், சி.எம்.சி காலனியில் உள்ள Bore No.23 லிருந்து லைன் போட்டு VKP pumping line உடன் link செய்வதற்கும் மற்றும் பாலத்தன்கரை திருப்பில் உள்ள Bore No.21 லிருந்து line போட்டு பர்னட்டிவிளை pumping line உடன் link செய்வதற்கும் ரூ.135000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.S.ஜாண்றோஸ் | 135000/- | மதிப்பீட்டை விட 0.49% அதிகம் (ரூ.112563/-) |
| 2 | திரு.C.சுரேஷ் | | மதிப்பீட்டை விட 0.06% குறைவு (ரூ.111950/-) |

**அ.கு** மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.C.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.846/2023/இ2

**தீர்மானம் எண்**.691 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.16**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் 11.12.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் நகராட்சிகளிலுள்ள பொது கழிப்பறை மற்றும் சமுதாய கழிப்பறைகளை நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறைகளாக தரம் உயர்த்தி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கியதன்படி, இந்நகராட்சியிலுள்ள பொது கழிப்பறை 4 எண்ணம் மற்றும் சமுதாய கழிப்பறை 1 எண்ணம் கொண்ட கழிப்பறைகளை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.6,00,000/- இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் 12.12.2023 அன்று முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் | 600000/- | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| 2. | திரு.ற்றி.இரவீந்திரன் | | மதிப்பீட்டை விட 0.14 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1334-/2023/இ1

**தீர்மானம் எண்**.692 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.17**

குளச்சல் நகராட்சியானது முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் வாரம் தோறும் இணையதள Google meeting நடைபெறுவதாலும், தினசரி அறிக்கைகள் அனைத்து பிரிவுகளில் இருந்தும் உடன் அனுப்பி வைக்க வேண்டி உள்ளதால், இந்நகராட்சி அலுவலகப் பயன்பாட்டிற்காக 5 கணணிகள் மற்றும் All in one Xerox scan வசதிகளுடன் கூடிய 1 பிரிண்டர் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு

ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/- தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1379/2023/இ1

**தீர்மானம் எண்**.693 **அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது**.

**பொருள் எண்.18**

குளச்சல் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு வீடுகளில் இருந்து கழிவு நீர் வெளியேறுவதால் பொது மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் அபாயம் உள்ளதினை கருத்தில் கொண்டு, டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய் தொற்று அதிகம் ஏற்படும் என்ற காரணத்தினாலும், அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில், பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் படி இந்நகராட்சி குடியிருப்பு வீடுகளில் இருந்து வெளி வரும் கழிவு நீரை தடுக்கும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதினை ஆட்சேபித்து 31.10.2023 ஆம் தேதி நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் இந்நகர்மன்ற உறுப்பினர்கள் S.ரமேஷ், M.A.ரஹீம், P.பனிக்குருசு, S.சுரேஷ் குமார்,A.ஜாண் பிரிட்டோ, C.வினேஷ், F.லாரன்ஸ், C.ஜாண்சன், S.ஷெர்லி பிளாரன்ஸ், T.தனலெட்சுமி, S.ஷீனத் பாத்திமா, S.குறைஷா பீவி, K.செல்வகுமாரி, P.சந்திர வயோலா, G.திலகா, S.மேரி, S.ஷீலா ஜெயந்தி, S.சஜீலா, S.A.சுஜித்ரா அவர்காளல் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, மேற்காணும் தீர்மானமானது 676 எண் கொண்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்காணும் தீர்மானம் அரசின் கொள்கை முடிவுகளுக்கு எதிராகவும்,பொது சுகாதாரச் சட்டம் 1939-னை பின்பற்றாமலும், பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்வதில் பாதிப்பு ஏற்படும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023, அத்தியாயம் IV, பகுதி I பிரிவு 164 ன் படி தீர்மானம் எண்.676 நாள் 31.10.2023 தீர்மானத்தினை ரத்து செய்யலாம்.

**அ.கு** 31.10.2023 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம் தீர்மானம் எண்.676 ஐ மன்றம் ரத்து செய்யலாம்.

ந.க.எண்.1373/2020/எச்1

**தீர்மானம் எண்.694, 31.10.2023 ஆம் தேதி நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் தீர்மானம் எண்.676 ஐ 29.12.2023-ல் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ரத்து செய்திட தீர்மானம் கொண்டு வந்ததை எதிர்த்து அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் ஆட்சேபனையும், எதிர்ப்பும் தெரிவித்ததன் காரணம் இத்தீர்மானமானது நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகிறது.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டுமான பணிகளுக்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து வழங்கிட திட்ட ஆலோசகர் (Consultancy) நியமனம் செய்திட 14.11.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | M/s.Glency Docmra Consultants India Pvt Ltd., Chennai | 1.00 % + GST 18% |
| 2. | M/s.Eclat Designs and Infrastructure Pvt Ltd., Chennai. | 1.5 % + GST 18% |
| 3. | M/s.Maxcon Town planning and Development Pvt Ltd., Chennai | 1.75 % + GST 18% |

**அ.கு**

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s.Glency Docmra Consultants India Pvt Ltd.,Chennai நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்ட மதிப்பீடு தயார் செய்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1154/2023/இ1

**தீர்மானம் எண்.695 அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.20**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10049/2019/EA2, நாள் 29.11.2021-ன் படி, இந்நகராட்சியில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% குறையாமல் குடிநீர் கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும் என்ற தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | குடிநீர் பயன்பாடு விபரம் | மாதம் ஒன்றிற்கு ஏற்கனவே உள்ள குடிநீர் கட்டணம் | மாதம் ஒன்றிற்கு 5% உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டணம் | மாதம் ஒன்றிற்கு வசூல் செய்யப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் | காலாண்டு ஒன்றிற்கு வசூல் செய்யப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு உபயோகம் ஒன்றிற்கு | 158/- | 166/- | 171/- | 513/- |
| 2 | தொழிற்சாலை உபயோகம் ஒன்றிற்கு | 378/- | 397/- | 402/- | 1206/- |
| 3 | வணிக உபயோகம் ஒன்றிங்கு | 567/- | 595/- | 600/- | 1800/- |

மேலும் மேற்கண்ட விபரப்படி குடிநீர் கட்டணம் 01.04.2024 முதல் 31.03.2025 வரை வசூல் செய்யப்படும் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.256/2020/இ2

**தீர்மானம் எண்.696 அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாக ஏலம் போகாத கடைகளுக்கு 20.12.2023-ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிப்பு செய்யப்பட்டது. ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு உள்ள கடைகளுக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | உரிம இனம் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் / முகவரி | மாத வாடகை ரூ (ஜி.எஸ்.டி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | கலைஞர் கருணாநிதி வணிக வளாக தரை தள கடை எண்.6 | A.முகம்மது சலாவுதீன் 4-131/1, ஆசாத் நகர், குளச்சல். | 4100/- |
| 2 | நவீன மீன் சந்தை வணிக வளாக முதல் தள கடை எண்.7 | S.கீதா 20/58A, புளியமூட்டுவிளை, குளச்சல் | 5500/- |

**அ.கு** : வ.எண்.1 மற்றும் 2-ல் கண்ட கடைகள் தொடர்ந்து ஏல நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் ஏலம் எடுத்து கொள்ள எவரும் முன் வராத நிலையில் நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்படும் நிதியிழப்பினை தவிர்த்திட பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.01/2020/அ2

**தீர்மானம் எண்.697 அ.குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.22**

**திருமதி.எஸ்.ஷீலா ஜெயந்தி வார்டு எண்.1 நகர்மன்ற உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்.**

1. குளச்சல் நகராட்சி 1-வது வார்டு பகுதியில் வெள்ளியாகுளம் பக்கம் கிணறு உள்ளது. அதில் நீர் அதிகமாக உள்ளது. அதில் தூசு நிறைந்து காணப்படுவதால் அவற்றை சுத்தம் செய்து கிணற்றின் மீது மூடி போட்டு பாதுகாத்து வறட்சி காலத்தில் குடிநீருக்காக பயன்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.
2. பாம்பூரி வாய்க்காலில் மழைக்காலங்களில் அதிகமான நீர் வருவதால் அருகில் உள்ள மரங்கள் விழுந்து கரைகள் இடிந்து மண் அரிப்பு ஏற்பட்டு நீர் ஊருக்குள் புகுந்து பலத்த சேதம் ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கரை ஓரம் உள்ள குடியிருப்பு மக்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பக்கச்சுவர் வாய்க்காலின் கரை ஓரத்தில் கட்டி தரும்படி பொதுப்பணித்துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.698 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**